1971 டிசம்பர் 9]

திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்ற அரங்கம்

** 199 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்ற அரங்கம் ஒன்று புதிதாகக் கட்ட வேண்டுமென்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) முன்னாள் மாவட்டக் கழகக் கட்டிடத்திலுள்ள கூட்ட அரங்கில் இட வசதி போதாமையால் மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டங்கள் நடத்துவதற்குத் தனியாக ஒரு கூட்ட அரங்கு கட்ட வேண்டுமென்று திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதுபற்றி ஆய்ந்து தக்க செயற்குறிப்பு அனுப்பும்படி திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரைக் கேட்கப் பட்டுள்ளது.

திரு. எம். முத்தையா : அமைச்சர் அவர்கள் கட்டி முடிப்பதாகக் கூறினார்கள். எப்போது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாவட்ட ஆட்சி மன்றத் தலைவரைக் கேட்டிருக்கிறோம். பதில் வந்த பிறகு அரசு பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

Collection of Agricultural loans in Coimbatore District

* 200 Q.—DR. H. V. HANDE : Will the Hon. Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether a demand made during the end of June, 1970 has been received by this Government from the Coimbatore District Agriculturists Association for the postponement of the recovery of all agricultural loans by one year; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகள் சங்கத்திடமிருந்து முறையீடு எதுவும் அரசுக்கு வரவில்லை. எனினும், சங்கம், 23—2—1970 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு ஒன்றைக் கொடுத்தது.

(இ) வான் பொய்த்தமையால் கடும் வறட்சி நிலவுகின்ற பகுதிகளில், அரசுக் கடன்கள் வசூலை 26—3—1970 நாளிலிருந்து 6 திங்கள் கால அளவுக்கு ஒத்தி வைக்க கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசு அதிகாரமளித்தது. மேலும், மிகவும் இன்னலுற்றவர்களுக்கும் இச் சலுகையை அளிக்குமாறும். கட்டாய முறைகளை மேற்கொள்ள வேண்டாம் என்றும் அரசு கட்டளையிட்டுள்ளது.